# DEPOSITION OF WITNESS
## (CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**
**CC.No.29/2025**

**2026-ம் ஆண்டு மார்ச் திங்கள் 07- ம் நாள் சனிக்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா.3 -வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.லட்சுமி இளநிலை உதவியாளர் நிறைவேற்றுபவர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 3 | தொழில் | - | 108 ஆம்புலன்ஸ் ஓட்டுனர் |
| பெயர் | - | தியாகு | வட்டம் | - | வால்பாறை |
| த/பெ | - | ஜெயச்சந்திரன் | சமயம் | - | |
| கிராமம் | - | சவரங்காடு எஸ்டேட் | வயது | - | 43/2026 |
| சாதி | - | | | | |

**<u>07-03-2026</u>**

**( எதிரி ஆஜர்)**

**<u>முதல் விசாரணை:</u>**

நான் மேற்படி முகவரியில் குடியிருந்து 108 ஆம்புலன்ஸ் ஓட்டுனராக பணிபுரிந்து வருகிறேன். அ.சா.1 ரமேஷ் எனபவரை தெரியும். ஆஜர் எதிரியை தெரியும். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள கையொப்பம் என்னுடையது அல்ல. வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருத அனுமதி கோரியதில் அனுமதி வழங்கப்பட்டு சாட்சி அரசு தரப்பால் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.)**

**<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

1. கடந்த 28.06.2024-ம் தேதி குற்ற எண் 87/2024-ன் வழக்கு தொடர்பாக வால்பாறை காவல் நிலைய போலீசார் சம்பவயிடமான பத்தோக்கரா காடு அருகில் விசாரணை செய்து கொண்டிருந்த போது, நானும், அஜீத்குமார் என்பவரும் நின்று பேசிக்கொண்டிருந்தோம் என்று சொன்னால் சரியல்ல. அப்போது, போலீசார் எங்கள் முன்பாக விபத்து சம்பந்தமாக சம்பவயிடத்தை பார்வையிட்டு, பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள் என்று சொன்னால் சரியல்ல. பின்னர் நானும், அஜீத்குமார் என்பவரும் பார்வை மகஜரில் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம் என்று போலீஸ் விசாரணையில் கூறிவிட்டு, தற்போது, எதிரிக்கு ஆதரவாகவும், அரசு தரப்பிற்கு எதிராகவும் பிறழ்சாட்சியாக மாறி சாட்சியமளிக்கின்றேன் என்று சொன்னால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>** இல்லை

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம்) திருமதி.N.மீனாட்சி
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.